யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 7 ஜுல்கஃ 25 இதழ் 190
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23-8-84

## துரையப்பா விளையாட்டரங்கில் நீண்ட கியூவில் வயோதிபர்!

### ஒய்வூதிய கொடுப்பனவு நேற்று ஆரம்பம்

(அலுவலக நிருபர்)

யாழ். மாவட்ட தபால் நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டு வந்த ஒய்வூதியம், பாதுகாப்பின்மை காரணமாக ஒருமுகப்படுத்தப்பட்டு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்குக் கட்டிடத்தில் பலத்த பாதுகாப்புடன் நேற்று வழங்கப்பட்டது.

யாழ். பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவும், யாழ். பிரதம தபால் அலுவலகத்துக்கு அண்மையிலும் துரையப்பா விளையாட்டரங்கு இருப்பது தெரிந்ததே.

யாழ். மாவட்டத்தில் உள்ள 22 தபால் அலுவலகங்களில் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து ஒய்வூதியம் வழங்குவதற்கு தபால் அலுவலக அதிகாரிகள் பாதுகாப்புக் கோரியிருந்தனர். அதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ். தலைமை தபால் அலுவலகத்தில் வைத்து ஒய்வூதியக் கொடுப்பனவு வழங்குவதற்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று அதிகாரிகள் வேண்டுகோள்

(8ம் பக்கம் பார்க்க)

# இலங்கைஅகதிகள்இந்தியாவில் டிசம்பர்வரை இருக்க அனுமதி!

## விசாவை நீடிக்க மாநிலஅரசுக்கு பணிப்பு

(நமது வெளிநாட்டு செய்தி சேவை)

**இலங்கையில் கடந்த ஆண்டு ஜூலையில் இடம்பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து இந்தியாவிற்கு வந்துள்ள சுமார் 40 ஆயிரம் இலங்கை அகதிகளுக்கும் இவ்வாண்டு இறுதி வரை இந்தியாவில் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

இலங்கைஅகதிகளுக்கு இந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரை விசாவழங்குமாறு மத்தியஅரசு தமிழ்நாடு மாநில அரசுக்கு பணிப்புரை வழங்கவுள்ளது.

இத்தகவல்களை இந்திய வெளியுறவு ஸ்டேட் அமைச்சர் திரு, ராம் நிவாஸ் மிர்தா லோகசபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்,

இலங்கையில் தொடர்ந்து பதட்டம் நிலவுவதால் இந்தியாவிலேயே இருக்க அனுமதியளிக்குமாறு சிலர் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே இவ்வாறு முடிவுசெய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதே வேளை ஜெனிவாவில் நடைபெற்ற ஐ. நா. வின் சிறுபான்மையினர் பாதுகாப்புப் பற்றிய துணைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய இந்தியப் பிரதிநிதி, இலங்கையில்பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளைக் கண்டித்துப் பேசினர்.

இந்தியக் குழுவின் தலைவரும்,

(8ம் பக்கம் பார்க்க)

## உமா, பிரபாவை சந்திக்க கொல்வின் விருப்பம்!

### மாகாண சபைகளே சிறந்ததாம்

(கொழும்பு)

தீவிரவாத தலைவர்களான உமாமகேஸ்வரன், பிரபாகரன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று தமது வீட்டில் நடத்திய பத்திரிகையாளர் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்னைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியவை என்று குறிப்பிட்ட அவர் மாகாண சபைகள் மூலமே தீர்வுகாண முடியும் என்றார்

இரண்டாவது சபை ஒன்று அமைக்கப்படுமானல் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் சுதந்திரக் கட்சி இல்லாமல் எடுக்கப்படும் முடிவு நல்ல பலனைத் தராது என்றும் அவர் கூறினர்.

''மாகாண சபைகள் இணைய வேண்டும் என்ற கருத்து நிலவி வருகிறது. அப்படி இணைவதையும் நாங்கள் எதிர்க்கவில்லை மாகாண சபைகளே தமிழ் மக்களின் பிரச்னைக்கு சிறந்த தீர்வு'' இவ்வாறு அவர் கூறினர்.

## 'சைப்பிரஸ் ஜனதிபதியின்திட்டம் எமது இனப்பிரச்னை தீர்வுக்கு மிகவும் பொருத்தமானது''

### குமார் பொன்னம்பலம் கருத்து

[கொழும்பு]

''சைப்பிரஸில் எழுந்துள்ள தனிநாட்டுப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு சைப்பிரஸ் ஜனதிபதி திரு. சைப்பிரியட் ஹிப்றியானேவினல் தயாரிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையிடம் பரிசீலனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ள திட்டத்தைப் போன்று நாமும் ஒரு திட்டத்தைத் தயாரித்து அமுலாக்கினல் எமது இனப் பிரச்னைக்கும் இலகுவான தீர்வொன்றைக் காணமுடியும்''.

இவ்வாறு தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

''சைப்பிரஸில் 80 வீதமான கிரேக்க இனத்தவரும், 18 சத வீதமான துருக்கியரும் வசிக்கிருர்கள். இவ்வாறிருந்தும் ஜனதிபதியின் திட்டத்தில்

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் நால்வர் கைது

### துப்பாக்கி, குண்டுகள் மீட்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கோட்டை கல்லாறு கிராமத்தை சுற்றி வளைத்து சோதனை நடத்திய

(8ம் பக்கம் பார்க்க)

## 327 பேர் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித் துறையில் வைத்துக் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் பட்டியல் ஒன்றை, வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு சேகரித்து யாழ். அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கத்திடம் கையளித்துள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேல் அதிகாரிகளுடன் லியனகே பேச்சுவார்த்தை

ஜெருசலம் ஆக, 22

இலங்கையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இஸ்ரேலிய வெளி உறவு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் திரு டேவிட் கிம்சேயுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இஸ்ரேலுடன் இலங்கை அரசு அண்மையில் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீண்டும் ராஜீயத் தொடர்புகள் வைத்துக் கொள்ள ஆரம்பித்தது தெரிந்ததே.

தனிப்பட்ட முறையில் பிரயாணம் மேற்கொண்டு இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே தான் இருதரப்புக் குழுவுடனும் அண்மையில் ராஜீயத் தொடர்புகள் ஏற்பட்டதன் பின்வருகை தந்துள்ள மிக உயர்ந்த அதிகாரி.

1970ம் ஆண்டு எகிப்தின் கோரிக்கையின் பேரில் இந்த

(8ம் பக்கம் பார்க்க)

## ''ஆடம்பர வைபவங்களை தவிர்க்க வேண்டும்''

### பண்டிதர் இரத்தினம் கோரிக்கை

(வேலணை)

தமிழ் மக்கள் தொடர்ந்து துன்பங்களை அனுபவித்து வரும் இவ்வேளையில் ஆடம்பர வைபவங்களையும் கேளிக்கைகளையும் ஒவ்வொருவரும் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்று முன்னள் காவலூர் எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தினமும் தமிழ்மக்கள் மத்தியில் ஏதேனும் ஒரு துயரசம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன என்றும் அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நமது குடும்பத்தில் ஒரு துயர சம்பவம் நடந்தால் நாம் மாதக்கணக்காக துயரம் அனுஷ்டிப்பது போல தமிழ் இனத்துக்கு ஏற்பட்டுள்ள துயர வேளையில் நாம் துக்கம் அனுஷ்டிக்க வேண்டும் என்றும் பண்டிதர் இரத்தினம் கேட்டுள்ளார்.

## குருநகர் வங்கியில் அரச ஊழியருக்கு வேதனம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகரில் உள்ள தற்காலிக இலங்கை வங்கிக் கிளையில், அரசாங்க திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இன்று வேதனம் வழங்கப்படும் என இலங்கை வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## பார்த்தசாரதி விரைவில் கொழும்பு வருவார்?

### இந்திராவுக்கு ஜனதிபதி கடிதம்

(கொழும்பு)

இந்தியப்பிரதமரின் சிறப்புப் பிரதிநிதி திரு ஜி பார்த்தசாரதி விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்வார் எனத் தெரிகிறது,

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் மூலம் இந்தியப் பிரதமருக்கு ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன எழுதியுள்ள கடிதத்திலும் திரு. பார்த்தசாரதியின் வருகைக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தியப் பிரதமர் திருமதி

(8 ம் பக்கம் பார்க்க)

## இந்திய உபஜனதிபதியாக வெங்கட்ராமன் தெரிவு

[புதுடில்லி]

இந்தியக் குடியரசின் அடுத்த உப ஜனதிபதியாக முன்னள் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய உப ஜனதிபதியைத் தெரிவுசெய்வதற்காக நேற்று நடைபெற்ற தேர்தலில் 331 அதிகப்படியான வாக்குகளால் அவர் வென்றார்

இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு வெங்கட்

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அரியாலை நெடுங்குளம் சந்திக்கு அண்மையில் குடியிருப்பு காணி (தென்னை, பனை உள்ளடங்கியது) ஆறு பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு; வ. தி. செல்வராஜா, காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறை. 1293

மூன்றும் குறுக்குத்தெரு, வேம்படி றேட் சந்தியில் 3பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளடங்கிய வீடு (4 படுக்கை அறைகள் வரவேற்பறை, சாப்பாட்டு அறை, நவீன வசதி கொண்ட சமையல்அறை, கராஜ்) நியாய விலைக்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: 18, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 1297

## தேவை

தளதிரிகோணகணிதம் (எஸ். எல். லோனி), அடிப்படைத் தூயகணிதம் (நடராசா), இலகு அட்சர கணிதம் (தோமஸ் ஈபன்), தயவு செய்து உடன் தேவை. ஆர். மஞ்சுகரன், 'மணல்', வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1292

யாழ். நகரில் பிரபல்யமான வியாபார ஸ்தாபனமொன்றிற்கு நாற்பது வயதுக்குட்பட்ட அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. மின்பொறி உபகரணங்கள் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். தாங்கள் கோரும் சம்பளத்துடன் கிராமசேவையாளரின் நற்சாட்சிப்பத்திரத்துடன் 30-08-84க்கு முன்விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1267, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1267

யாழ். நகரில் எஸ்லோன் விற்பனை நிலையமொன்றிற்கு எஸ்லோன் உபகரணங்கள் (Bend, Socket மற்றும் உபகரணங்கள்) செய்வதில் அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை. இதற்கு முன்வேலை செய்த அனுபவத்துடன் விண்ணப்பிக்கவும். சம்பள விஷயத்தை நேரில் பேசி தீர்மானிக்கலாம். விண்ணப்பங்களை 30 - 08 - 84 க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1282 ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 1282

## காணவில்லை

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் மினி பஸ்சில் உரப்பையுடனுள்ள பார்சல் மாறுப்பட்டுஉள்ளது. அதனுள் உணவுமுத்திரை ஐந்துஉள்ளது. அதை கண்டுஎடுத்தவர் தயவுசெய்து கீழ்உள்ள விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும் சன்மானம் வழங்கப்படும். சி. இரத்தினசிங்கம், காலையடி தெற்கு, பண்டத்தரிப்பு. 1286

## FOR SALE

Used Air Conditioner 9000 B.T.U. Bargain 7500/- Door Closer 750/-, English Water heater 2750/-. Inspection Saturday. Duraisamy, Anaicottai Junction. 1400

## அறிவித்தல்

விம்ஸ் ஸ்தாபனத்தில் பொருட்களை விற்பனைக்கு கொடுத்தவர்கள் விற்கப்படாத பொருட்களை இன்றிலிருந்து இருவாரங்களுக்குள் பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

முகாமையாளர்,
14, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம்.
23-8-84 (1290)

அளவெட்டி
குருக்கள் கிணற்றடி
விநாயகர் ஆலய
தொண்டர் சபையினரின்

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 1650 | 11. | 2140 |
| 2. | 2432 | 12. | 490 |
| 3. | 1409 | 13. | 2063 |
| 4. | 2548 | 14. | 314 |
| 5. | 3286 | 15 | 2988 |
| 6. | 2323 | 16. | 579 |
| 7. | 2560 | 17. | 527 |
| 8. | 1693 | 18. | 3032 |
| 9. | 1157 | 19. | 837 |
| 10. | 132 | 20. | 1186 |
| | | 21. | 1605 |

(1296)

## ஏல விற்பனை

ஏலவிற்பனை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை நடைபெறும்.

வெட்டுத்துண்டுகள் :-
(முறுக்கு) உருக்குச் சட்டங்கள்
வட்டவடிவான சட்டங்கள்
கோண இரும்பு
மற்றும் பாவித்த வளைகள் முதலியன

காங்கேசன்துறை லங்கா சீமெந்துத் தொழிற்சாலையில் ஏல விற்பனைக்கு உண்டு.

சித்திபெற்ற கேள்விதாரர் முழுத்தொகையின் 1/3 பகுதியை உடனடியாகச் செலுத்தி மிகுதிப் பணத்தை 24 மணித்தியாலத்திற்குள் செலுத்தவேண்டும்.

விற்பனை முடிந்து 5 நாட்களுக்குள் பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும். பொருட்களை பிரதி சனிக்கிழமைகளில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்
1291

## யாழ்ப்பாண அக்கடமி

### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப் டும்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 3 - 9 - 84-ல் ஆரம்பமாகின்றன.

84/85-ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 65 மாணவர்களுக்கு மேலாக மருத்துவம், பல்லறுவை மருத்துவம், விலங்கு மருத்துவ விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம், எந்திரவியல், பௌதிக விஞ்ஞானம், சட்டம் ஆகிய பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமது திறமைக்குச் சான்றாகும்

அதிபர்.
தொலைபேசி எண். 22617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 1283

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கோப்பாய், கோப்பாய் தெற்கு கல்வளவு வன்னியசேகரம் முத்துக்குமாரசுவாமி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

— மரணமெய்தியவர்

முத்துக்குமாரசுவாமி வன்னியசேகரம் கல்வளவு கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. :796

எதிராக

வன்னியசேகரம் முத்துக்குமாரசுவாமி மகள் புனிதவதி கல்வளவு கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

— எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் :-ஆந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 20-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்


வரைதல்
செ. யு. யேம்ஸ்
மனுதாரின் சட்டத்தரணி
1280

## காணி / வீடு விற்பனவு

(1) மானிப்பாய் கட்டுடை மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் 4 பரப்பு தென்னங்காணி.
(2) யாழ். பழைய பூங்கா வீதிக்கு அண்மையாக 2½ பரப்பில் ஒரு புதிய வீடு.
(3) கோப்பாய் தபால் கந்தோருக்கு அண்மையில் 10 பரப்பு தோட்டக்காணி.

விபரங்களுக்கு :
JAFFNA PROPERTY TRADES LTD.,
3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
போன் : 23698.

## நன்றி நவிலல்



மண்ணுலகு
19 - 05 - 38
விண்ணுலகு
08 - 08 - 84

அமரர் சதாசிவம் சீவரத்தினம்
(பிரபல வர்த்தகர்)
உரிமையாளர்

ஹோம்நீட்ஸ்
3, Co-Op Complex கட்டிடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஹோம்நீட்ஸ்
35, லோவர் வீதி,
பதுளை.

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் வாழ்வில் வழிகாட்டியாய், கொடை வள்ளலாய் வாழ்ந்து, எம்மை யெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் சிரமம் பாராது கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், அவர் உயிர்காக்கப் போராடிய டாக்டர்கள், தாதிமார்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
அன்பு மனைவி, மக்கள், தாய்
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார்.
4-ம் வட்டாரம், புங்குடுதீவு. 1295




வாகனத்தை நீங்கள் வாங்கும்பொழுது அதன் பெறுமதியின் 75% கடனாகப் பெற்றுக்கொள்ளுங்கள்...

தவணை முறையில் எந்த வாகனத்தையும் உரிமையாக்கும் உங்கள் விருப்பத்திற்கு வழக்கத்திலுள்ள சிறந்த சலுகைகளை நாங்கள் அளிக்கிறோம்.

வாடகைக் கொள்வனவு முறையில் நாம் வழங்கும் வாகனங்கள் :
* சுக சௌகரியமுள்ள பஸ் வண்டிகள்
* தாங்கி வாகனங்கள், பார வண்டிகள்
* லொறிகள்
* உழவு யந்திரங்கள்
* சாமான் வண்டிகள், பயணி வண்டிகள்
* குளிரூட்டப்பட்ட உல்லாச வண்டிகள்
* குடும்பத்திற்கேற்ற கார்கள்
* சகல வித மோட்டார் சைக்கிள்கள் பலவித ரகங்களில்....

கவரும் மற்றைய சலுகைகள் :
● வரி விலக்கு
● நியாயமான மாதாந்த தவணை முறை
● 36 மாதம் வரையிலான வாடகை கொள்வனவுச் சலுகை

வாகனத்தை உரிமையாக்க நாங்கள் உதவுகிறோம்.

TFC
த பினான்ஸ் கொம்பனி லிமிரெட்
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# ஆந்திர முதலமைச்சர் பதவிநீக்கம்: கவர்னர் என்னுடன் ஆலோசிக்கவில்லை

## இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, ஆக. 22

''ஆந்திரா முன்னாள் முதலமைச்சர் திரு. என். டி ராமராவைப் பதவி நீக்கம் செய்வதற்கு முன்னர் ஆந்திர மாநில கவர்னர் திரு. ராம்லால் என்னுடன் ஆலோசனை நடத்தவில்லை''.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆந்திர நிலைமை குறித்து இந்தியப் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:- ''ஆந்திர முன்னாள் முதலமைச்சர் ராமராவைப் பதவிநீக்கம் செய்யும் விவகாரத்தில் நானோ, இந்திரா காங்கிரஸோ, இந்திரா காங்கிரஸ் மத்திய கமிட்டியோ சம்பந்தப்படவில்லை என்று கூறினார்.

(வெ)

## விரிவுரைகள் 27-ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான, மருத்துவபீட விரிவுரைகள் இம்மாதம் 27-ம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பதில் உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானபீடம், மருத்துவபீடம்(3-ம், 4-ம் வருடம்) விரிவுரைகள் இம்மாதம் 27-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்றும், மருத்துவபீட 2-ம் எம். பி, பி. எஸ். 3-ம் தவணை அக்டோபர் 8-ம் திகதியும், 2-ம் எம். பீ. பீ. எஸ். பரீட்சை செப்டம்பர் 12ம் திகதியும் நடைபெறும் என்றும் பதில் உபவேந்தர் பேராசிரியர் சீ. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார். (மா)

## சோவியத்துக்கான கோதுமைஏற்றுமதியை அமெரிக்கா நிறுத்தாது!

வாஷிங்டன், ஆக. 22

ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள் நிலை கொண்டிருக்கின்றபோதும் அமெரிக்கா சோவியத் யூனியனுக்கான தனது கோதுமை மா ஏற்றுமதியை நிறுத்தமாட்டாது என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ரீகன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி ரீகன், 1979ம் ஆண்டு சோவியத் யூனியனுக்கு எதிராகக் கோதுமை மா ஏற்றுமதியை நிறுத்திய போது அதனால் சோவியத் மக்களைவிட அமெரிக்க விவசாயிகளே பெரிதும் நஷ்டமடைந்தனர். இதனால் அமெரிக்கா சோவியத் யூனியனுக்கான தனது கோதுமை ஏற்றுமதியை நிறுத்தமாட்டாது என்று அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா தனது கோதுமையில் உயர்ரக கோதுமையைச் சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதிசெய்து வருகிறது. (சூ)

## சிரியா - லெபனான் ஜனாதிபதி பேச்சுவார்த்தை

பெய்ரூட், ஆக. 22

சிரியா ஜனாதிபதி ஹாபிஸ் அல்-அசாத்தும், லெபனான் ஜனாதிபதி அமின் ஜெமாயலும் விரைவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

சிரியா ஜனாதிபதியின் பிரதான ஆலோசகர் ஒருவரும், லெபனானிய பிரதமர் ராஷிட் கராமியும் லெபனானிய மலைப் பிரதேசத்தில் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையில் இந்த ஜனாதிபதிகளின் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த காலங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் சிரியா - லெபனான் பேச்சுவார்த்தைகளை இரு ஜனாதிபதிகளும் மீண்டும் ஆரம்பிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. லெபனானின் கிழக்குப் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் இஸ்ரேலியப் படைகள் குறித்தும், லெபனானிய பாதுகாப்புக் குறித்தும் இவர்கள் முக்கியமாகப் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

9 வருட காலம் இடம்பெற்று வந்த லெபனானிய உள்நாட்டு யுத்தம் சிரியாவின் தலையீட்டினால் தற்போது ஓரளவு ஓய்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (சூ)

## மட்டக்களப்பில் புயலால் பாதிக்கப்பட்ட மதத்தலங்கள் நிதிஉதவி பெறவில்லை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1978ம் ஆண்டு புயலால் பாதிக்கப்பட்டு இதுவரை நிதி உதவி கிடைக்கப்பெறாத மத வழிபாட்டுத் தலங்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை அரைவாசிக்கும் மேற்பட்ட ஆலய நிர்வாகிகள் இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை என மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

புயலால் பாதிக்கப்பட்ட மத வழிபாட்டுத் தலங்களில் சுமார் 244 தலங்கள் இதுவரை நிவாரண உதவி பெறவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி நிதியிலிருந்து சுமார் 9 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

இந்நிதியைப் பெறுவதற்குரிய ஆலய நிர்வாகிகள் மத்தியில் ஏற்பட்ட இழுபறி சில ஆலயங்களில் நிர்வாகங்கள் செயலிழந்து காணப்படுவது உட்படப் பல்வேறு காரணங்களால்தான் இந்நிதியுதவியை அநேக ஆலயங்கள் பெற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில் இந்நிதியுதவி இதுவரை பெற்றுக்கொள்ளாத ஆலயங்களின் நிதியை ஜனாதிபதி நிதிக்கு திருப்பி அனுப்பாமல் மேலும் நிவாரண நிதியுதவிகேட்டு விண்ணப்பங்கள் செய்துள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு வழங்குவது குறித்து ஆலோசனை செய்யப்படுவதாகவும் தெரியவருகின்றது.

## றேனியோ யந்திரம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 'றேனியோ' இயந்திரம் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

இனந்தெரியாத ஆறு பேர் வித்தியாலயத்தின் காவலாளியைப் பயமுறுத்தி, வித்தியாலய அதிபரிடமிருந்து அறைத் திறப்பைப்பெற்றுவந்து அறையைத் திறந்து 'றேனியோ' இயந்திரத்தைக் கொள்ளை அடித்துச் சென்றதாக யாழ் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது (மா)

## சம்பளம் கிடைத்தது

(வவனியா]

வவனியா மாவட்ட அரசாங்க ஆசிரியர்கள் தமது இம்மாதச் சம்பளத்தைப் பெற்றுள்ளனர்.

கடந்த 20ம்திகதி மக்கள் வங்கி மூலமாக வவனியா பகுதி ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது.

## பாலர் பாடசாலை

[கொழும்புத்துறை]

மாதர் ஐக்கிய நாணய சங்கத்தின் ஆதரவில் பத்தைமேனியில் பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப் பாலர் பாடசாலை இம் மாதம் 27ம் திகதி வலி கிழக்கு உதவி அரச அதிபரினால் திறந்து வைக்கப்படும்.

## 56 இளைஞர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்ட இளைஞர்களில் மேலும் 16 பேர் விடுதலையாகிநேற்றுமுன் தினம்நண்பகல்வீடு வந்து சேர்ந்தனர்.

விடுதலையாகிய இளைஞர்களில் மூவர் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர்கள். மீதி 13 பேரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள்.

விடுதலை செய்யப்பட்ட இளைஞர்கள் நேற்றுக்காலை கொழும்பிலிருந்து புறப்பட்டு புகையிரத மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

வல்வெட்டித்துறையில் கடந்த 4ம் திகதி 341 இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தார்கள் என்றும், இதுவரை 56 இளைஞர்களேவிடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் பிரஜைகள் குழு பொருளாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை விடுதலை செய்யக் கோரி, இளைஞர்களின் தாய்மார் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை வேவில் பிள்ளையார் கோவில் முன்றலில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தது தெரிந்ததே. (மா)

## சக்திவாய்ந்த நவீன கருவிகள் உப அலுவலகத்தில் கொள்ளை!

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலகத்திலிருந்து சக்திவாய்ந்த இருகருவிகள் இனந்தெரியாத நபர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளன.

மின் இணைப்புகளைப் பரிசோதிக்கும் கருவியொன்றும், நிலத்தின் தன்மையைச் சோதிக்கும் கருவி ஒன்றுமே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வான் ஒன்றில் வந்த இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி உப-அலுவலகத்தில் இருந்தவர்களைப் பயமுறுத்தி இக்கருவிகளைக் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உப-அலுவலக உத்தியோகத்தர் திரு. இளையதம்பி முருகையா இச்சம்பவம் பற்றிக் காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

## மன்னார் நிலைமை: வழமைக்கு திரும்புகிறது!

(மன்னார்)

மன்னாரில் வர்த்தக நிலையங்கள் சிலஎரிக்கப்பட்டதால் ஏற்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நீக்கும்பொருட்டு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களும், தனிப்பட்ட சில வர்த்தகர்களும் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை விநியோகித்து வருகின்றனர்.

இதேவேளை, சிகரெட், மதுபாணம் போன்ற பொருட்கள் தொடர்ந்தும் அதிக விலைக்கேவிற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மன்னார் பட்டின வீதிகளில் சேதத்துக்குள்ளான கட்டிட இடிபாடுகள் யாவும் அகற்றப்பட்டுள்ளன. தற்போது மன்னார் பட்டினத்தில் அங்காடா வியாபாரம் அதிகரித்துள்ளது.

மன்னாரில் வர்த்தக நிலையங்கள் எரிக்கப்பட்டதையடுத்து பாதுகாப்பு தேடி தமது வீடுகளைவிட்டு வெளியேறி காடுகளில் தங்கியிருந்த மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் கடந்த புதன்கிழமை முதல் தமது வீடுகளுக்குத் திரும்பினர்.

மன்னாரில் இடம் பெற்ற சம்பவங்களையடுத்து மன்னார் பகுதியிலுள்ள அரச அலுவலகங்களில் ஊழியர்களின் வரவு கடந்த வெள்ளிக்கிழமை வரை குறைவாகவே காணப்பட்டது.

## "புதிய சமுதாயத்தின் தேவைகள் வரவேற்கப்படவேண்டும்"

(புங்குடுதீவு)

''எமது மக்களின் தேவைகளை நாம் நன்கறிவோம்: நாடும் நாட்டுமக்களும் நலம் பெற உழைக்கவேண்டும் என்றுவாயாரப் பேசுவோர் பலருண்டு. ஆனால், மனமார எண்ணித்திறமாக செயல் புரியும்சேவை மனப்பான்மையோ புதிய சமுதாயத்தின் திறன்களை, அவர்களின் நல்ல உழைப்புக்களை இந்தச்சமூகம் பெற வேண்டும் என்ற எண்ணமோ இருப்பதில்லை இன்றைய நிலையில் புதியவார்ப்புக்களாக எமது சிந்தனையும் செயல்களும் இடம்பெற வேண்டிய நேரத்தில் புதிய சமுதாயத்தின் திறமைகளைப் பழையவர்கள் ஏன்வரவேற்கக்கூடாது?

புங்குடுதீவுகிழக்கில் நடைபெற்ற புங்குடுதீவுகிழக்கு கிராம அபிவிருந்திச்சங்கக் கூட்டத்தின் அங்குரார்ப்பண விழாவில் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட புங்குடுதீவு மகாவித்தியாலய உப-அதிபர் திரு க. செல்வரெத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு கேள்வியை எழுப்பினார்.

வேலணைகிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி குணரெத்தினம் புஷ்பராணி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. க. செல்வரெத்தினம் தொடர்ந்து பேசுகையில்; பொதுஸ்தாபனங்கள் மூலம் நாட்டுமக்களுக்கும் நலிவடைந்து வருந்துவோருக்கும் நன்மைகளைச் செய்யவேண்டும் என்றும் நாம் பதவிஆசைக்காக பந்தயம் பிடிக்கவும்-சிண்டுமுடியவும் முயன்றால் அதுகேலிக் கூத்தானதொன்றாகும் என்றும் கூறினார்.

நடப்புவருட நிர்வாகிகள் வருமாறு: தலைவர் க. செல்வரெத்தினம் செயலாளர் இரா. பரமலிங்கம் உபதலைவர்கள் செ இராசலிங்கம்- வே. செல்லத்துரை உப-செயலாளர் சி சண்முகலிங்கம் பொருளாளராகத் சோ. சரவணபவானந்தன் நிர்வாக உறுப்பினர்களாகத்

(7-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

உயர்ந்த விடயங்களை எளிய முறையில் கூறுவதே சால்பின் இலட்சணம். —எமர்சன்

## நமதுநோக்கு

### ஆந்திராவின் அரசியல் நெருக்கடி

ஆந்திர பிரதேச மாநிலத்தில் என். ரி. ராமராவ் அமைச்சரவை கலைக்கப்பட்டதை யடுத்து ஏற்பட்டுள்ள கொந்தளிப்பின் காரணமாக நேற்றுவரை சுமார் 25 பேர் கொல்லப்பட்டும் 60 பேர் வரை காயமடைந்துமுள்ளனர்.

இதேசமயம், தம்மைப் பதவியிலிருந்து இறக்கிய ஆந்திரா மாநில ஆளுநர் திரு ராம்லாலுக்கெதிராக தமது ஆதரவாளர்களுடன் புதுடில்லிக்குச் சென்று குடியரசுத்தலைவர் ஜியானி செயில் சிங்கிடம் நீதிகோரி மகஜர் ஒன்றைக் கையளித்துவிட்டுத் திரும்பியிருக்கின்றார் திரு.ராமராவ்.

சட்டசபையில் பெரும்பான்மை பலத்தை ராமராவ் இழந்துவிட்டார் என்ற அடிப்படையில் மாநில ஆளுநர் தமக்குள்ள அதிகாரத்தைப் பிரயோகித்து அவரைப் பதவி நீக்கம் செய்துள்ளார். ஆளுநரின் இந்தச்செயல் அரசியல் சட்டத்துக்கு ஏற்புடையதா - சிக்கலான சூழ்நிலையில் நியாயப்பூர்வமான சட்ட ஒழுங்குக்கேற்ப தமது முடிவு•னை அவர் எடுத்தாரா, என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இப்போழுது குடியரசுத் தலைவரின் கையில் இருக்கின்றது

கடந்த பொதுத்தேர்தலின் போது ஆந்திரா பிரதேச மாநிலத்தின் 295 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் பெரும்பான்மை பலத்துடன் தமது தெலுங்கு தேசம் கட்சியைப் பதவியில் அமர்த்திய பிரபல நடிகர் என். ரி. ராமராவ் அண்மையில் அமெரிக்கா சென்று இருதயத்தில் அறுவை சிகிச்சை செய்து கொண்டு ஒருமாத காலம் அங்கு ஓய்வு எடுத்தபின் நாடு திரும்பினுர். இந்த ஒருமாத காலத்துக்குள் உள்ளூரில் அவருக்கெதிராக பலவிதமான சதிகளும் நடைபெற்றிருப்பது அவருக்குத் தெரியாமல் போய்விட்டது.

மக்கள் பலத்தால் பதவிக்குவந்த அவர் மக்கள் பிரதிநிதிகளிடம் நம்பிக்கையின்றி தமது குடும்பத்தில் முக்கியமானவர்களிடமே அரசியல் பொறுப்புக்களைக் கொடுத்துவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகின்றது. அரசியலில் அனுபவம் குறைந்தவரான ராமராவின் ஆப்த நண்பர்களே அவருக்கு எதிராகக் கிளம்புவதற்கான அடிப்படைக் காரணம் இதுவே என்றும் கூறப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தை உள்ளூர் இந்திராகாங்கிரஸ் குழுவினர் சரியாகப்பயன்படுத்திக் கொண்டிருக்கிறுர்கள்.

ராமராவுக்கு எதிராகக் கிளம்பிய அவரது முன்னுள் சகாவான பாஸ்கரராவ் சட்டசபையில் தமக்குப் பெரும்பான்மை இருப்பதாகக் கூறியதை ஏற்றுக் கொண்ட ஆளுநர் ராம்லால் அவரை முதலமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

சாதாரணமாக இம்மாதிரி சூழ்நிலையில் பதவியில் இருக்கும் முதல் அமைச்சர் தமக்குச் சபையில் பெரும்பான்மைப் பலம் இருக்கின்றது என்பதை நிரூபிக்கச் சந்தர்ப்பம் அளித்திருக்க வேண்டும் - அல்லது அவருக்கு எதிராகக் கிளம்பியுள்ளவரையாதல் தமக்குப் பெரும்பான்மைப் பலம் இருக்கிறதென்பதைச் சபையில் நிரூபிக்கும்படி பணித்திருக்கவேண்டும். அவ்வாருன நடவடிக்கையே ஜனநாயக மரபுக்கு உகந்ததாகவிருக்கும். ஆனல் ஆளுநர் அவ்வாறு செய்யாமல் திரு. பாஸ்கரராவை முதல்வராக்கி பெரும்பான்மையை நிரூபிக்க ஒருமாத கால அவகாசமும் கொடுத்திருக்கின்ருர்.

முன்னுள் இமாசல பிரதேச இந்திரா காங்கிரஸ் முதலமைச்சரான இன்றைய ஆந்திரா ஆளுநர் ராம்லால் இன்னமும் அரசியல் சார்புடனேயே நடந்துகொண்டுள்ளார் என்று எண்ணுவதற்கு இது இடமளித்துள்ளது.

மத்திய அரசுக்கு எதிராகக் குரல்கொடுக்கும் இந்திரா காங்கிரஸ் அல்லாத மாநில முதல்வர்களில் திரு. ராமராவ் முக்கியஸ்தராக இருந்துவந்துள்ளார். அண்மையில் நடந்த தேசிய திட்டமிடல் ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது டாக்டர் ஷேக் அப்துல்லாவின் காஷ்மீர் மாநில அரசு கலைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்புச்செய்த முதல்வர்களில் ராமராவ் முக்கிய இடம் வகித்தார். இது பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்திக்கும் பெரும் கவலையைக் கொடுத்திருந்தது.

எனவே கிடைக்கும் முதற் சந்தர்ப்பத்தையே பயன்படுத்தி ராமராவ் அரசைக் கவிழ்த்துவிடுவது மாநில இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் ஆளுநருக்கும் திருப்தியளிப்பதாய் இருந்திருக்கும் - இதை மத்தியத் தலைவர்களும் ஆமோதிப்பார்கள் என்றே அவர்கள் கருதியிருப்பார்கள். ஆனல் ஆந்திரா பிரதேச நிலவரம் தொடர்பாக லோக சபையில் நடைபெற்றுள்ள விவாதங்கள் மத்திய அரசுக்கு ஏற்பட்டுள்ள தர்மசங்கடமான நிலைமையை எடுத்துக் காட்டியுள்ளது.

விவாதத்திற்கிடையில் எழுந்து பேசிய பிரதம மந்திரி இந்திரா காந்தி மாநில மந்திரிசபைக் கலைப்பைப் பற்றி ஆளுநர் தம்முடன் எந்தவிதத்திலும் ஆலோசனை நடத்தவில்லையென்று ஆணித்தரமாக மறுத்துள்ளார்.

இந்த நிலைமையில் கவர்னரின் செயல்பற்றித் தீர்மானிக்கும் பொறுப்பு குடியரசுத் தலைவரின் கையிலேயே இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. இன்னும் இரண்டொரு தினங்களில் இதன் முடிவு வெளிவரலாம்.

இன்னும் சில மாதங்களில் பொதுத் தேர்தலை எதிர்நோக்கவிருக்கும் வேளையில் இந்திரா காங்கிரஸ் கட்சியும் மத்திய தலைவர்களும் தமது செல்வாக்கினை சில்லறை அரசியல் விடயங்களுக்காகச் சோரம்போக விடலாகாது. ஆந்திராவில் ஏற்பட்டுள்ள நிலைமையையும் சுகவீனத்தைப் பொருட்படுத்தாது நீதிக்காகப் போராடுவதில் ராமராவ் துணிவுடன் முன்னிற்பதையும் பார்க்கும் பொழுது அவருடைய செல்வாக்கு அங்கு மேலும்அதிகரிக்குமென்றே தோன்றுகின்றது.

# நரகம்போல் காட்சிதரும் பண்ணை சிகிச்சை நிலையம்!

பண்ணைமார்பு நோய் சிகிச்சை நிலையம் நரகம்போல் காட்சியளிக்கின்றது!

இச்சிகிச்சை நிலையத்திற்கு செல்லும் நோயாளிகள் தொற்று நோய்களுக்கு ஆளாகவேண்டிய அவல நிலையிலுள்ளனர்.

மலேரியாத்தடுப்பு இயக்கக் காரியாலயமும், பண்ணை அரசினர் மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்திலேயே அமைந்துள்ளது.

இக்காரியாலயக் கட்டிடங்களில் புருக்கள் நிரந்தரமாக வாசம்செய்வதால் தினமும் காலையில் வேலைக்கு வரும் ஊழியர்கள் புருக்களின் கழிவுகளுக்கு மத்தியிலேயே கடமையாற்றவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர்.

ஆடு, மாடு போன்ற கால்நடைகளும் இரவில் இச்சிகிச்சை நிலையத்தையே தங்குமிடமாகக் கொண்டுள்ளன.

**புகார்ச் செய்தி:** நமது நிருபர் எஸ். ஜே. ஜெயக்குமார்

இச்சிகிச்சை நிலையத்தில் தங்கியுள்ள மார்பு நோயாளிகளுக்கென மலசல கூடம் கூட இல்லாமலுள்ளது. இதனுல் இந்நோயாளிகள் சுற்றுடல்களையே நாடவேண்டிய நிர்ப்பந்த நிலையை அனுபவித்து வருகின்றனர். இதனுல் ஆஸ்பத்திரிச் சுற்றுடல் அசுத்மடைந்துள்ளதுடன் துர்நாற்றமும் வீசிவருகின்றது. இதனுல் நோயாளிகள் பெரிதும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தில் ''எக்ஸ்-ரே'' தொழில்நுட்ப உத்தியோகத்தர் லீவில் சென்றுல் எக்ஸ்-ரே' படம் பிடிக்கமுடியாத நிலை ஏற்படுகின்றது. இதனுல் 'எக்ஸ்-ரே' படம் பிடிக்கச் செல்லும் நோயாளிகளும், வைத்திய பரிசோதனைகளுக்காகச் செல்லுபவர்களும் பிரஸ்த பஊழியர் லீவு முடிந்து திரும்பும் வரை தினமும் அலையவேண்டிய அவல நிலையிலுள்ளனர். பதில் உத்தியோகத்தர் இல்லாததே இதற்குற் காரணமாகும்.

இதுபற்றிய எதுவித அறிவித்தல்களும் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை.

## யாழ். கடற்கரைவீதி ஆரோக்கியநாதர் திருப்பதி: நாளை ஆயர் அபிஷேகம்

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள திருஇருதயநாதர் ஆலயம் புனித. ஆரோக்கியநாதர் திருப்பதியின் அர்ச்சிப்பு விழாவும், அபிஷேகச் சடங்கும் நாளை வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட இவ்வாலயத்தை யாழ். ஆயர் மகாவந்தனைக்குரிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை மந்திரித்துத் திறந்துவைப்பார். பன்னெடுங்காலமாக நிறைவேற்றப்படாமல் இருந்த இந்தத் திருப்பணி இன்று புதியதோர் சலையழகு தவழும் ஆலயமாகவும் அன்பின் இறைமகனும் கொள்ளை நோய் போக்கும் வள்ளலான புனிதரின் அருள் வீடாகவும் அமைந்து பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்தியுள்ளது.

பணபலத்தாலும் ஆன்மபலத்தாலும் ஆலயத்தைக் கட்டினுர்கள். ஆனல் புதிதாகக் கட்டிமுடிக்கப்பட்ட இவ் ஆலயமோ, அனைவருடைய அன்பானஎண்ணத்திலும் வியர்வை நிறைந்த உழைப்பிலும் பல அன்பளிப்பாளர்களின் காணிக்கையினுலும் கட்டப்பட்டிருக்கின்றது. பொதுவாக ஆலயம் என்றுல் இறைவனுடைய இல்லம் என்று கூறுவர். புதிய ஏற்பாட்டின்படி மக்களாகிய எமக்கு ஒரு கோவில் புனிதமானது. காரணம் இறைவனை வழிபட இறைமக்கள் கூட்டம் இங்கே சந்திக்கின்றது. கல்வாரிப் பலியைக் கொண்டாடுகிறது. எனவே இறைவனுடைய வீடு மட்டுமல்ல, இறை

(5-ம் பக்கம் பார்க்க)

### வி. எம். ஜெருட்

முன்னர் இங்கு அமர்ந்திருந்த 51 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த ஆலயத்தின் வரலாறு புதிய ஆலயம்அமைக்கப்பட்டதன் மூலம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. நாட்டின்பலபாகங்களிலிருந்து புனிதரிடம் அருள்வேண்டிஆவணி 27 ல் கூடும் மக்களுக்கு யாழ். மத்தியில் உருவாகியிருக்கும் இவ்வாலயம் ஓர் அளப்பரிய கொடையாகும். பல் வேறு காலங்களில் பல்வேறு இடங்களிலிருந்து அருள் சிந்தித் தன்னை அண்டியோர்க்கு அருளும் நலமும் ஈய்ந்துநின்ற புனித. ஆரோக்கியநாதர் புதியதோர் ஆலயத்தில் நிறைவுறும் பொன்னுள், நாளைய தினமாகும்.

எமது இறைகமனுகிய இயேசுவின் காலத்தில் கீர்த்தியுடன் விளங்கிய ஜெருசலேம் நகரின் யூத ஆலயம் அமைப்பதற்கு 46 வருடங்கள் பிடித்தன என அறிகிறேம்(அருள்:20) சாலமோன், ஏரோது அரசர்கள் தங்கள் படை பலத்தாலும்,

## இன்று நல்லை உற்சவம் 22-ம் நாள்
## நல்லைப் பதியில் உறையும் கந்தா!

யாழ்மா நகரின் அரணுய் விளங்கும்
நல்லைப் பதியில் உறையும் கந்தா!
சூழும் இடர்கள் பலவை நாளும்
தாங்கி வாழும் தமிழர் நாங்கள்
வாழும் வழிகள் பலவைக் காட்டி
வகுப்பாய் இனிய வாழ்வை எமக்காய்!

கந்தா முருகா! கதிர்வேல் முருகா!
வருவாய் நிதமும் தருவாய் நலமே!
உன்தாள் வணங்கும் அடியார்க் கென்றும்
அருள்வாய் எங்கள் திருமால் மருகா!
பன்னும் அரிய புதுமை பலவும்
புரிவா யப்பா பாரில் எமக்காய்!

புள்ளி மயில்மீ தேறி வாராய்!
புவியில் எம்மைக் காப்பாய் நீயே!
அள்ளித் தாராய் உன்தன் அருளை
அழகே உருவாய் நிற்கும் முருகா!
உள்ளம் உருக உன்தாள் பணிந்து
ஏத்தும் அடியார் தம்மைப் பாராய்!

—கவிஞர் க. பாலசுப்பிரமணியம்

★ ★

## திருநல்லைப் பதிமேவு திகழ்ஞான குகதெய்வம்

நாடாது நாடியே நலமருளுந் தெய்வமுயர்
நாட்டத்தை யூட்டு தெய்வம்
நவநீத மாயனின் மாமருக ணுகவொளிர்
நவமான நல்ல தெய்வம்
ஈடாவ தொன்றேனு மில்லாத தெய்வமுறும்
இருவினை நீக்கு தெய்வம்
இளமுருக குகனென்ன வேத்திடும் தொண்டர்தம்
இனமா யிருக்குந் தெய்வம்
கூடாது கூடுமுயர் கொள்கையவர் நெஞ்சிலருட்
குணமாய் நிறைந்த தெய்வம்
குறையேது மில்லாத குமிழ்ஞான முருவான
குருவா யமைந்த தெய்வம்
தேடாது தேடவே தெளிவாகுந் தெய்வநலந்
தெவிட்டாத வினிய தெய்வம்
தினமுருகி வழிபடுந் திருநல்லைப் பதிமேவு
திகழ்ஞான குகதெய்வ மே.

ச. தங்கமாமயிலோன்

# இலங்கை — இங்கிலாந்து கிரிக்கெட் டெஸ்ட் இன்று ஆரம்பம்

1983ம் ஆண்டு உலக கிண்ணத்தை இந்தியாவேசுவீகரித்துக் கொண்டாலும் இன்றைய கிரிகெட் உலகில் மேற்கு இந்தியதீவுகளே முன்னணியில் திகழ்கின்றது. தமது தாய் நாட்டிலே, அவுஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டியிலே அவர்கள் பெற்ற மூன்று தொடர்ச்சியான வெற்றிகளும் அண்மையில் நடைபெற்ற இங்கிலாந்துக்கெதிரான போட்டியில் அவர்கள் பெற்ற ஐந்து தொடர்ச்சியான வெற்றிகளும் இதற்குச் சான்ருகும். மேற்கு இந்தியா- இங்கிலாந்துக்கிடையேயான இந்த ஐந்து

## ஜி.எஸ். சவரிமுத்து

போட்டிகளிலும் 'லோட்ஸ்' மைதானத்திலே நடைபெற்ற 2வது டெஸ்ட்டே எல்லாவற்வற்றிக்கும் சிகரம் வைத்தாற்போல் உள்ளது. இந்த ஒரே போட்டியிலேயே இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு ஒரு சந்தர்ப்பம் இருந்தது. அதிலும் அவர்களுக்கு 9 விக்கட்டால் தோல்விதான்!

### 2வது டெஸ்ட் போட்டி

எவ்வாயினும் இரண்டாவது டெஸ்ட்டில் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 286 ஓட்டங்களே எடுத்தது மே. இந்திய தீவுகள் அணி தனது .முதல் இன்னிங்ஸில் 245 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விவியன் ஈச்சாட்சின் 72 ஆகும். இங்கிலாந்தின் சார்பில் இயண் போத்தம் 8 விக்கட்டுகளே கைப்பற்றினர். இங்கிலாந்து அணி தனது 2வது இன்னிங்ஸில் 300 ஓட்டங்களுக்கு 9 விக்கட்டுக்களே இழந்திருக்கும்போது தனது ஆட்டத்தை நிறைவு செய்து கொண்டது,

மே. இந்திய தீவுகள் அணி வெற்றிபெறுவதற்கு 314 ஓட்டங்களே பெறவேண்டிய நிலேயில் தனது இறுதிநாள் ஆட்டத்தை ஆரம்பித்தது கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் இப்போட்டி வெற்றி தோல்வின்ன்றி முடிவடையும் என எதிர்பார்த்தார்கள். ஆனல் மே இந்திய தீவுகளின் ஆரம்ப ஆட்டக்காரர் கோடன் கிரீனிட்ஜ் கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரினதும் எண்ணத்தையும் தவிடுபொடியாக்கினர். அவரது 24 பவுண்டரிகள் உள்ளடக்கிய 214 ஓட்டங்களே 'லோட்ஸ்' மைதானம் என்றுமே மறக்காது. கோடன் கிரீனிட்ஜின் உதவியுடன் மே. இந்திய தீவுகள் அணி 9 விட்கட் வெற்றியினை சம்பாதித்துக்கொண்டது,

'லோட்ஸ்' மைதானத்தில் நடைபெற்ற 'டெஸ்ட்போட்டியை போலவே மே.இந்திய அணு மற்றய 3 போட்டிகளிலும் வெற்றிபெற்றது. எனவே மொத்தம் 5 போட்டிகளிலும் தோல்விகண்டு மனம் நொந்த நிலேயில் இங்கிலாந்து அணி விளங்கியது. எல்லாவற்றிற்கும் மேலாக இங்கிலாந்தின் புதிய அணித் தலேவர் டேவிட் கவர், தான் தலேமை தாங்கிய முதல் 5 போட்டிகளிலும் தோல்வியையே சந்தித்துள்ளார். ''நான் கடந்த 5 போட்டிகளிலும் பெற்ற தலேமைத்துவ அனுபவத்தை இலங்கைக்கு எதிரான போட்டியில் பயன்படுத்துவேன்'' என்று டேவிட் கவர் கூறியுள்ளார்.

**இலங்கை — இங்கிலாந்து கிரிக்கெட் டெஸ்ட் போட்டி 'லோட்ஸ்' மைதானத்தில் இன்று ஆரம்பமாக விருக் கும் இவ்வேளேயில் நடந்து முடிந்த மேற்கு இந்திய இங்கிலாந்து கிரிக்கெட்டெஸ்ட் பற்றிய கண்ணேட்டம்.**

அண்மையில் 'கௌண்டிகளுக்கு இடையேயான பல போட்டிகளில் இலங்கை அணி கலந்துகொண்டது இவற்றில் எல்லா ஆட்டக்காரரும் சிறப்பாக ஆடினர்கள். இலங்கை அணியின் விக்கட் காப்பாளர் கைய் அல்விஸ் காயம் காரணமாக இலங்கை வந்துவிட்டார், வேகப் பந்து வீச்சாளர் விேேதன் ஜோனும் 'லோட்ஸ்' டெஸ்ட்டில் ஆடுவது சந்தேகம் என்று அறிவிக்கப்படுகிறது எவ்வாருயினும் மிகுதி ஆட்டக்காரர்கள் தமது திறமையைக் காட்டுவார்கள் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பு ஆகும்.

## சகாயமாதா உற்சவம்

(வவுணதீவு)

மட்டக்களப்பில் பிரபலம் மிக்க யாத்திரைத்தலமான ஆயித்தியமலே புனித சதா சகாயமாதா ஆலய வருடாந்த திருநாள் இம் மாதம் 24ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்டம்பர் 2ந் திகதி காலே திருப்பலி பூசையுடன் முடிவுறும்.

# பனம்பழங்களே சேகரிக்க ப.அ. சபை கோரிக்கை

[கொழும்புத்துறை]

தற்போது பனம்பழப் பருவ காலமாகியதால் பனம்பழங்களேச் சேகரிப்பதிலும், பனம் பழச்சாற்றைப் பாதுகாப்பதிலும் இலங்கை பனே அபிவிருத்திச் சபை தீவிர கவனம் செலுத்திவருகின்றது.

பனம்பழங்களேச் சேகரிக்குமாறுபொதுமக்களுக்குவேண்டுகோள் விடுத்துள்ளதுடன், பனம் பழச்சாற்றைக் கொள்வனவு செய்யவும், பனே அபிவிருத்திச் சபை முன்வந்துள்ளது. இப்பனம் பழச்சாற்றில் இருந்துபனுட்டு, ஜாம், கோடியல் போன்றதை உற்பத்தி செய்யவும் செய்யத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கிராமிய ரீதியாகப் பனுட்டு உற்பத்தியிலும் ஊக்கமளிக்கப்பட்டு வருகின்றது. பனுட்டு எமது பாரம்பரிய உணவாகும். யாழ். மாவட்டத்தில் பனம் பழப் ருவகாலத்தில் சுமார் 3200 அந்தர் பனுட்டு உற்பத்தி செய்யப்பட்டு வந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஒரு பனேமரத்திலிருந்து 50-80 பழங்கள் வரை பெற முடியும் என்றும், பனுட்டில் இருந்து அதனே அடிப்படையாகக் கொண்ட பல்வேறு வகையான உணவு பொருட்களே உற்பத்திசெய்ய முடியும் என்றும் ஆலோசனே கூறப்பட்டுள்ளது.

# இலங்கைப் பிரச்னேயில் இந்தியாவின் நிலேப்பாடு

## 'இந்து' நிருபர் விமர்சனம்

(இலங்கை நிலே குறித்து இந்திய அரசு கொண்டிருக்கும் நிலேப்பாடு தொடர்பாக 'இந்து' பத்திரிகையின் புதுடில்லி நிருபர் ஜி. கே. ரெட்டி எழுதியுள்ள விமர்சனத்தை இங்கு தருகின்றேம்.)

இந்தியப் பிரதமர் காந்தி இலங்கயைின் தற்போதைய நிலேவரம் குறித்து தமது ஆழ்ந்தகவலேயை அமெரிக்க ஜனதிபதி ரெுனல்ட் றீகனுக்கும்.பிரிட்டிஸ் பிரதமர் திருமதி.மாக்ரெட் தட்சருக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

அதே சமயம் இலங்கையிலுள்ள இனப் பிரச்னேக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாண இலங்கை அரசு முற்படுவதினல் ஏற்படக்கூடிய பாரதூரமான விளேவுகள் குறித்து ஏனேய பல நாடுகளேயும் அறிந்திருக்க செய்யும் வகையில் இந்திய அரசு புது டில்லியிலுள்ள வெளி நாட்டு தூதரங்கள் மூலம் அந் நாடுகளிக்கு விடயங்களே விளக்கிவருகிறது.

இந்த இராஜீய முயற்சிகளின் அடிப்படை நோக்கம் இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் தொடர்பாக இந்தியா வெறும் பார்வையாளனுக இருக்க முடியாது என்பதனே காட்டுவதற்கே ஆகும். இலங்கையில் தற்போது ஏற்பட்டு வரும் நிலேமை குறித்து இந்தியா பாரதூரமான கருத்து கொண்டிருக்கிறது. என்ற விடயம் இலங்கை அரசாங்கத்துக்கும் ஜனுதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனுவுக்கும் தெளிவாக அறவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழன் காலே இலங்கை தொடர்பாக வெளிவிவாகார இணேஅமைச்சர் திரு ராம் நிவாஸ்மிருதா லோக்சபாவில் விடுத்த அறிக்கையை ராஜசபாவில் அவர் தாக்கல் செய்வதற்கு முன்னதாக மேலும் ஒரு புதிய பந்தி சேர்த்துக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும், அந்த பந்தியில் உள்ள முக்கியமான வசனத்தில் இலங்கையில் விரிவாக இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஏராளமான இந்திய நாட்டவர்களும் இந்திய வம்சாவளியினரும் பாதிக்கப்படலாம் என்பதினல் ''அங்கே உருவாகி வரும் சூழ்நிலேகள் கவனமாக அவதானிக்கப்படுகிறது. எந்தவித நடவடிக்கை அங்கு தேவைப்படுகிறதோ அவ்விதமான நடவடிக்கை எடுக்கப்படும்.'' என்பதாகும்.

முழு அறிக்கையைபார்க்கையில் பாரதூரமாக அவதானிக்கப்படுகிறது என்பதே ஆகும்.

ஆனல் புதிதாக சேர்க்கப்பட்ட பந்தியில் ''இந்தியா பாரதூரமாக அக்கறை கொண்டுள்ளதாகவும், மிக உன்னிப்பாக கவனித்து வருவது வலியுறுத்தப்பட்டு வருவதுடன் பொருத்தமான நடவடிக்கை தேவைப்படலாம் என்பதுகூட மறைமுகமாக கூறப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பு செல்வதற்கு முன்னர் புதுடில்லியிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் திரு. பேனுட் திலகரத்தின இந்திய வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகளுடன் இலங்கையின் தற்போதைய நிலேமை குறித்து விரிவான பேச்சுக்களே நடத்தியுள்ளார். இந்த பச்சுக்களின் போது இராணுவ நடவடிக்கைகளே நிறுத்த வேண்டும், வெளிநாட்டு கூலிப் படைகளேயும், இஸ்ரேலிய முகவர்களேயும் திருப்பி அனுப்பவேண்டும், தமிழர் பிரச்னேயை தீர்ப்பதற்கு நியாய பூர்வமான புதிய கருத்துக்களே முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது

## உபகரணங்கள் வழங்கப்பட்டன

(மாவிட்டபுரம்)

பத்துலட்சம் வீட்டுத்திட்டத்தின் அங்கமான தச்சுத் தொழில், மேசன் தொழில் பயிற்சி நிலேயத்துக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பத்துலட்சம் வீட்டுத்திட்டத்தின் அங்கமாக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஆரம்பிக்கப்பட விருக்கும் தச்சுத்தொழில், மேசன் தொழில் பயிற்சிநிலேயங்களில் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைய இருக்கும் நிலேயத்துக்குதேவையான உபகரணங்கள் தேசிய வீடமைப்பு இலாகா மேலதிக முகாமையாளர் திரு.ரி.பி.முருகையாவால் வழங்கப்பட்டது.

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு எம்.சுப்பிரமணியம் தலேமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

## ஆரோக்கியநாதர்..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வீடாகவும் ஆலயம் மாறுகிறது.

நாளே அர்ச்சித்துத் திறக்கப்படும் இவ்வாலயத்தில் புனித. ஆரோக்கியநாதர் திருநாள் 27ம் நாள் வரை விசேச ஆராதனேகள் வழிபாடுகள் அனேத்தும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. புனித. ஆரோக்கிய நாதரின் திருநாள் தினமான ஆவணி 27ம் நாள் காலே 7.00 மணிக்கு யாழ்/பேராலய பங்குத் தந்தை வண. பிதா ஜெபநேசன் அடிகளார் அவர்களால் திருநாட் திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்படுவதோடு, புனிதரின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

புதிதாக அர்ச்சிப்பு விழாக் காணும் இந்த ஆலயத்தின் பராமரிப்பைப் பெற்று, அதனுல் நன்மை பெறும் விசுவாசிகள் பெருகி, அனேவர் வாழ்விலும் ஓர் புதுப்பித்தல் உண்டாகி, எம்மைச் சூழ்ந்துள்ள கொடிய 'இடர்கள்' நீங்க இந்த விழா மூலம் இறைமகன் யேசுவை வேண்டுவோமாக.

## ரூ.5.லட்சம் ஒதுக்கீடு

[வவுணதீவு]

கரவெட்டியை மகிளவட்டவானுடன் இணேத்து பாலம் அமைப்பதற்கு முதன்மையளித்து ஐந்து லட்சம் ரூபா நடப்பு நிதி ஆண்டில் ஒதுக்கித் தருமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரப்பட்டுள்ளது.

மண்முனே மேற்கு பிரதேச சபை அண்மையில் கூடிய போது மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

1985ம் அண்டுக்கான வேலேத் திட்டங்களே தயாரிப்பதற்காக மேற்படி சபை திரு சி.கிருஷ்ணபிள்ளே தலேமையில் பிரிவு உதவி அரசாங்க அதிபர் அலுவலக மண்டபத்தில் கூடியது. அப்பொழுது நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல் திட்டங்களே சபை ஆராய்ந்தது.

விவசாயத் தேவைகளுக்கும் கல்வி, அபிவிருத்திக்கும் முதன்மையளிக்கும் வகையில் மேற்படி செயல்படும் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசாங்க அதிபரின் கவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அத் திட்டத்தின் படி சிறிய நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு 3 லட்சத்து 80 ஆயிரமும், நெடுஞ்சாலேகள் இலாகாவுக்கு 15லட்சத்து 75 ஆயிரமும் கல்வி நடவடிக்கைகளுக்கு 8 லட்சத்து 40 ஆயிரமும்'கிராமஅபிவிருத்திக்கு 7 லட்சத்து50 ஆயிரமும் சுகாதார அபிவிருத்திக்கு 4லட்சமும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## யாருடையது

கொழும்புத்துறை 2ம்குறுக்குத் தெருவைச் சேர்ந்த திரு. கணபதி வல்லிபுரம் என்பவரின் அடையாள அட்டையை திருமதி செல்வரத்தினம் பரமேஸ்வரியும், திருநெல்வேலி ஆடியபாதம் வீதி திரு. கொடிப்பிள்ளைருசான் சித்ரோகே என்பவரின் அடையாய அட்டையை திரு. எம். ராமானந்தமும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## வானெலித் தொலேத் தொடர்பு வசதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கன்னன்குடா உபதபால் நிலேயத்தில் நீண்ட காலமாக நிலவிவந்த தொலேபேசி சீர்கேடுகளேயடுத்து மேற்படி உபதபால் நிலேயத்திற்கு தற்போதுவானெலித்தொலேத் தொடர்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்பேசும் உபதபால் அதிபர்கள் சங்க மட்டக்களப்பு மாவட்ட கிளேத்தலேவர் திரு. ஜோர்ஜ்பிள்ளே இவ்விடயம் குறித்து பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்தே இந்நடவடிக்கையை பிராந்திய தபால் தந்தி தொலேத்தொடர்பு திணேக்களம் மேற்கொண்டது.

★ ★ விற்றுத்தீர்க்கும் ★ ★
மலிவு விற்பனே
இப்பொழுது நடைபெறுகிறது
பிரவுண்சன்
ரேட் சென்ரர்
''கூட்டுறவுக் கட்டிடம்''
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
1404

## வங்கிகள் திறக்கப்பட்டன

(மன்னார்)

கடந்த சில தினங்களாக மூடப்பட்டிருந்த மன்னார் வங்கிக்கிளைகள் மீண்டும் திறக்கப்பட்டன.

மன்னார் பகுதியைச்சேர்ந்த வாடிக்கையாளர்களின் நலன் கருதியே மூடப்பட்ட வங்கிக்கிளைகள் மீண்டும் திறக்கப்பட்டன.

இவ் வங்கிக்கிளைகள் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவென தினமும் காலை 9 மணிமுதல் 10 மணி வரையுமே திறந்திருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'இவர்களுக்கு' சம்பளம் கிடைத்தது!

(கொழும்புத்துறை)

யாழ் அரச செயலகத்திலும், திணைக்களங்களிலும் நேற்று ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டது.

யாழ் அரச அதிபரின் நடவடிக்கையைத் தொடர்ந்து விசேட ஏற்பாடுகளின் மீது சம்பளம் வழங்குவதற்கான பணம் பெறப்பட்டு வழங்கப்பட்டது.

சில திணைக்களங்கள் வங்கிகளில் பணம் எடுக்கமுடியாது போய்விட்டதால் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் உதவியுடன் சம்பளம் வழங்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

வழக்கமாக அரச திணைக்களங்களில் 25ம் திகதியே சம்பளம்வழங்கும் நாளாக இருந்தபோதிலும் வங்கிகள் சீராகச் செயற்படாத காரணத்தினால் கடந்த 20ம் திகதியிலிருந்து சம்பளம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

முன்னர் யாழ். கச்சேரியிலுள்ள இலங்கை வங்கிக்கிளையே செயலக ஊழியர்களுக்கான சம்பளப்பணத்தை வழங்கிவந்தது. தற்போது கச்சேரி இலங்கைவங்கிக்கிளை மூடப்பட்டு விட்டது.

## திணைக்களத்தில் இடைக்கால ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நேற்று ஆசிரியர்களுக்கான இடைக்கால ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

சுமார் 115 ஆசிரியர்களுக்கு இந்த இடைக்கால ஓய்வூதியம் வழங்கப்பட்டது

ஓய்வூதியமாக சுமார் ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (க)

## ஆண்டுப் பஜனை

(சுழிபுரம்)

பண்ணாகம் இந்து சமய விருத்தி சங்கத்தினர் பண்ணாகம் விசவத்தனை முருகன் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை ஆண்டு பஜனை நடத்தவுள்ளனர்,

அன்றைய தினம் கூட்டுப் பிரார்த்தனையும் இறைவன் புழி பாடும். சமய அறிவு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.


# Radio and Electronics Engineering Course

WEEK - END CLASSES

**யாழ். நகரில்**

சகல தொழில் நுட்ப வசதிகளுடனுன எமது நவீன ஆய்வுகூடத்தில் இலங்கையில் தன்னிகரற்றுத் திகழ்ந்த ஆசிரியர்களிடமிருந்து கற்று நிறை பலன் பெற நாம் அளிக்கும்

## PART - I - 6 மாதம்

★ RADIO: பழுதறப் பழுது பார்க்கவும் பிறர் உதவியின்றி உருவாக்கவும்.

★ TAPE RECORDER
★ HI-FI STEREO AMPLIFIER
★ RADIOCONTROL
★ TRANSFORMER
} இவற்றோடு இன்னோரன்ன பல இலத்திரனியற்கருவிகள் யாவற்றின் அடிப்படை அமைப்புக்குரிய தெளிவான Theory and Practicals ம் அவற்றைப் பாரியமுறையில் உருவாக்கவும் பழுது பார்க்கவும்.

★ DIGITAL ELECTRONICS: Theory and practicals

★ ஒளியின் தாக்கத்தால் இயங்கும் இலத்திரனுக்குரிய கருவிகளை உருவாக்கவும்.

★ HI-FI Stereo Phonic Amplifiers, Battery Eleminators போன்ற பல இலத்திரனியற் கருவிகளும் விற்பனைத் தரத்தில் தயாரிக்கும் தொழில் நுட்பமும் புகட்டப்படும்.

★ பயிற்சி முடிவில் எம்மால் இலவசமாக வழங்கப்படும் உதிரிப் பாகங்களைக் கொண்டு உதவி எதுவுமின்றித் தாமாகவே வானொலியொன்றைச் செய்து முடிக்கும் திறமையைப் பெறுவதோடு அவற்றைப் பாரிய முறையில் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தையும் பெற்றுக் கொள்வர்.

★ எமது தொழிற் கூடத்தில் வானொலி உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யும் முறையில் இலவச பயிற்சி அளிக்கப்படும்.

## PART - II - 3 மாதம்

★ T. V,
★ VIDEO RECORDERS
} Theory and Practicals பழுது பார்த்த

★ பரீட்சை முடிவில் தேறுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

★ வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

**கட்டணம்:** PART - I ரூபா 1500/-
PART - II ரூபா 1000/-

தவணை முறையிலும் கட்டணத்தைச் செலுத்தலாம்.

**ஆரம்பம்:**

வார இறுதி வகுப்புகள் — 1-9-84
வார நாள் வகுப்புகள் — 5-9-84

# CANTABIA INSTITUTE


21, MAIN STREET, JAFFNA.
T'PHONE: 24201


## ரூபவாஹினி

மாலை

5-30 'நியூ ஸூறிவியூ' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-00 'ஹியர்ஸ் பூமர்' (ஆங்கிலம்)
6-25 'அப் அன்ட்டவுண்' ஆங்கிலம்)
6-40 சோவியத்திரைப்படம்
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
7-45 சிங்கள நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 நாடகம் (சிங்களம்)
9-05 'கோல்டன் மூமன்ற்' ஒலிம்பிக் ஒத்திகையொன்றின் போது அமெரிக்க மெய்வல்லுனர் ஒருவருக்கும், ரஷ்ய ஜிம்னாஸ்டிக் வீராங்கனைக்குமிடையே ஏற்பட்ட காதல்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'கோல்டன் மூமன்ற்' தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 நிகழ்ச்சிகள் முடிவு

## பரு.லயன்ஸ் கழக தலைவராகத் தெரிவு



பருத்தித்துறை லயன்ஸ்கழகத் தலைவராக லயன்.டாக்டர் எம்.கே.முருகானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை மருத்துவக் கல்லூரி இந்துமன்றத் தலைவராகவும், தமிழ்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய டாக்டர் முருகானந்தன் நாடகப்போட்டிகள், பேச்சுப்போட்டிகளிலும் சிறந்த பரிசில்களைப் பெற்றவர். இலங்கை குடும்பத் திட்டச்சங்க குடும்பநலசுகாதார நடவடிக்கைகளில் முக்கியபங்கெடுத்துழைத்து வருவதுடன் வடமாராட்சிப் பகுதியில் சமூகசமயசேவைகளிலும் முன்னின்று உழைத்து வருகின்றார்.

இவர் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, இலங்கை மருத்துவக்கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவராவார்.

## காயமடைந்தோர் உடல் நிலை

[மாவிட்டபுரம்]

மாவிட்டபுரம், தெல்லிப்பளையில் நடந்த அசம்பாவித சம்பவங்களில் காயமடைந்தவர்கள் தேறிவருதாக தெரிவிக்கப்பட்டது.

மாவிட்டபுரம், தெல்லிப்பளை ஆகியஇடங்களில்கடந்த வாரம் நடந்த அசம்பாவித சம்பவங்களில் துப்பாக்கி சூட்டு காயங்கள் அடைந்த இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட் திரு. தாமோதரம் பிள்ளை, துரைசாமி; கந்தசாமி ஆகியோர் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் நிலைமை தற்போது தேறி வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## 'விடுதலைபெறவேண்டுமென்ற சிந்தனை வேண்டும்'' மன்னார் ஆயர் உரை

(கரவெட்டி)

''பயம் என்ற உணர்வு நமக்கு இருந்தால்தான் அதிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற சிந்தனை நம்மனதில் தோன்றும்.''

இவ்வாறு மன்னார் ஆயர் அதி வண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மடுத்திருப்பதி உற்சவத்தின் போது மறை உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; 'வேதாகமத்தில் பல இடங்களில் இறைவன் பலருக்கும் பலவித அச்சங்களிலுமிருந்து துணைநின்று காத்திருக்கின்றார். நமக்கும் இன்று பீடித்திருக்கும் பலவித அச்சங்களிலும் பயங்களிலும் இருந்து மீட்சிபெற இறைவன் துணை நிற்கிறார் என்ற எண்ணம் தோன்றி இறைவனின் புஜபலம் நம்மோடே என்ற வைராக்கியத்துடன் அவற்றிலிருந்து விடுதலைபெற செயற்படுவோம் ஆகஎன்று கூறினார்.

மடுத்திருப்பதிப் பரிபாலகர் அருட்திரு தேவராஜா அடிகளார் தலைமையில் தேவநற்கருணை சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது.

சிலாபம் மறைமாவட்ட ஆயர் அதி. வண. பிராங் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—0 (23-08-1984)
வாரம்—வியாழன்
திதி—ஏகாதசி காலை 8-54ன் மேல் துவாதசி
நக்ஷத்திரம்— திருவாதிரை பிற்பகல் 12-04ன் மேல் புனர்பூசம்

மேடம்:- கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள் உடல்நலமும் சிறிது பாதிக்கப்படலாம் அவசர போக்கையும் அதிதீவிர உணர்ச்சியையும் தவிர்க்கவும்.

இடபம்:- பொருளாதாரத் துறையில் நல்லமுன்னேற்றம் காணப்படும் கொடுக்கல் வாங்கள் மூலம் அதிகலாபம் அடைவீர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

மிதுனம்:- முன்னேற்றப் பாதையில் தடைகள் தென்படுகின்றன தொழில்புரியுமிடத்தில் தொல்லைகள் உருவாகும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

கடகம்:- சகலதுறைகளிலும் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும் வாகனச்சொந்தக்காரர்களுக்கு அதிகலாபம்கிடைக்கும் கல்வியில் நல்லமுன்னேற்றம் உண்டு.

சிங்கம்:- புதிய பாதையொன்று உங்களைஎதிர்நோக்கியுள்ளது நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம் புத்திரரால் மனதிற்கு திருப்தி ஏற்படும்.

கன்னி:- வேவுகணைகள் தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாவீர்கள் அபாயகரமான தொழிலில் நிதானமாக ஈடுபடவும்.

துலாம்:- இனிமையின் அழைப்பு இன்று உங்களை அழைக்கலாம் இல்லம் பல்கலைக்கழகமாக மாறும் களஸ்திரவழியால் கண்ணியம்சேரும் சுபதினம்.

விருச்சிகம்:- வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரும் அவசரபோக்கு ஆபத்தைத்தரும் சகோதரவழியால் சஞ்சலமுண்டு,

தனுசு:- இறைவழிபாடு மேலிடும் இதயத்தில் அமைதியும் ஏற்படும் முதியவர் ஒருவர் தக்கசமயத்தில் உங்களுக்கு உதவமுன்வருவார்.

மகரம்:- உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள் தொழில் துறையில் முன்னேற்றம் காணப்படும் வெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்தியும் கிடைக்கும்.

கும்பம்:- காத்திருக்கும் பகைவர் கால் இடறக்கூடும் பொருள் வருபடி ஏற்படுத்தும் கெடுபிடி எதிரியும் பணிவர் எதிலும் ஆத்திரபடாதிருப்பது உத்தமம்.

மீனம்:- கயவர் கண் துடைப்பு வேலையில் ஈடுபடுவர் கடமையும் தவறலாம் ஆயுதபிடை விழுந்துநோக்காடுண்டு நிதான புத்தியுடன் செயலாற்றவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## சுகாதார ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பதட்ட நிலைமைகாரணமாக தத்தமது நிரந்தர வேலைத்தலங்களில்கடமைக்கு சமூகமளிக்க அஞ்சி தத்தமது வீடுகளுக்கு சமீபமாகவுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் சமூகமளித்து கையொப்பமிட்டு வேலை செய்த யாழ். சுகாதார திணைக்கள சமயாசமய ஊழியர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள யாழ்.சுகாதார திணைக்களம் முடிவுசெய்துள்ளது.

நிரந்த ஊழியரைப் பொறுத்தவரை அவர்கள் தங்கள் வேலை செய்யுமிடங்களுக்கு சமூகமளிக்காது சமீபமாகவுள்ள இடங்களில் சமூகமளித்து கையொப்பமிட அனுமதி வழங்க வேண்டாம் என்று யாழ். சுகாதாரசேவைப்பணிப்பாளர் சகல நிறுவனத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் அறிவித்துள்ளார்.

## காசநோய்த் தடுப்பு நடவடிக்கை

[கொழும்புத்துறை]

இலங்கை தேசிய காசநோய் தடுப்பு நிவாரணச் சங்க யாழ். கிளை காசநோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கு முன்னோடியாக பீ சீ ஜீ காசநோய்த் தடுப்பு மருந்து விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது இம்மாதம் 31ம் திகதி ஜுபிலி சுகாதார நிலையத்தில் காசநோய்த் தடுப்பு மருந்து விநியோகிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓய்வூதியம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால் நிலைய பகுதியிலுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கடந்த ஜூலை மாதத்திற்கான ஓய்வூதியப் பணமும், இம் மாதத்திற்கான ஓய்வூதியப் பணமும் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் வைத்து வழங்கப்படும் என்று பண்டத்தரிப்பு தபால் நிலைய அதிபர் திரு. எஸ். சரவணமுத்து அறிவித்துள்ளார்.

## சிற்றூழியர் தாக்கப்பட்டாராம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் இரவு நேரத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த சிற்றூழியர் ஒருவரைஅண்மையில் வசிக்கும் ஒருவர் அத்துமீறிப் பிரவேசித்து தாக்கினுராம்.

கடந்த சனிக்கிழமை ,இரவு நடைபெற்ற இத்தாக்குதலுக்கு ஆட்சேபம் தெரிவித்து வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர் வேலைநிறுத்தம் செய்ய முற்பட்டபோது வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி இதுபற்றி தாம் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை அடுத்து வேலைநீக்கம் கைவிடப்பட்டது.


**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்.-லதா
நம்பியார்
**பல்லாண்டு வாழ்க**
(புத்தம் புதிய பிரதி-கலர்)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம் ஜி.ஆர்.-தேவிகா
**ஆனந்த ஜோதி**

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-30
எம். ஜி. ஆர்.-சாவித்திரி
வீரப்பா - சந்திரபாபு
**மகாதேவி**
(புத்தம் புதிய பிரதி)

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
**அவசரக் கல்யாணம்**

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
**மனோகரா**
(புதிய பிரதி)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30 6-30,
**பந்தாட்டம்**
24-8-84 முதல்
**முடிசூடா மன்னன்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரிதா
**கீழ்வானம்சிவக்கும்**
(ஈஸ்மன் கலர்)


# சிமெந்துத் தட்டுப்பாடு தவிர்க்கப்பட்டது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் நடந்த கொள்ளையால் ஏற்படவிருந்த சிமெந்து தட்டுப்பாடு உடன் எடுத்தநடவடிக்கையால் தவிர்க்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுஸ்தாபனம், லங்கா சிமெந்து லிமிட்டெட் ஆகியவற்றுக்கு சிமெந்துதயாரிப்பதற்கு முக்கியமான சுண்ணும்புக்கல் வழங்கிவந்த கற்குழிப் பகுதி வேலைகள், அங்கிருந்து 'எக்ஸ்பிளோடர்' என்னும் கற்கள் வெடிமூலம் தகர்க்கும் கருவி கொள்ளையிடப்பட்டதால் தடைப்பட்டது.

மேற்படி கற்குழிப்பகுதி மனேஜர் திரு. ஞானபண்டிதன் எடுத்ததீவிர முயற்சியால் மீண்டும் கற்குழிப்பகுதியில் இருந்து கல் எடுக்கும் வேலைகள்கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இராணுவப்படையினரின் பாதுகாப்புடன் மேற்படி வேலைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக எடுக்கப்பட்ட நடவடிக்கையால் ஏற்படவிருந்த சிமெந்து தட்டுப்பாடு தவிர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது

மேற்படி கருவி இங்கிருந்து 2ம் முறையாக கொள்ளையிடப்பட்டது தெரிந்ததே.

## கூட்டுறவு கள்ளுத் தவறணைகள்

(கொழும்புத்துறை)

வவனிக்குளம் துணுக்காய்ப் பகுதிகளிலும் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவுக் கள்ளுத் தவறணைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட அமைச் இது சம்பந்தமான நடவக்கைகளை மேற்கொண்டு வருகின்றூர். இலங்கைப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு.க நடராச இக்கூட்டுறவுத் தவறணை அமைப்பது பற்றிப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவ மாவட்டத்தில் கூட்டுறவுக் கள்ளுத்தவறணைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப் படவிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ் விடயமாகத் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்கள் நிதியமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளன.

## பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

அல்வாய் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் பதினைந்துநாள் மஹோற்சவத்தை நடத்திய சிவாசாரியார் சிவஸ்ரீ இ.சபேசக் குருக்களுக்கு பாராட்டுவிழா ஒன்று கோவில் சந்நிதானத்தில் பரிபாலனசபையாரால் நடத்தப்பட்டது.

ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ யோ. பத்மநாதசர்மா விழாவை ஆரம்பித்து வைத்தார். பரிபாலன சபைச் செயலாளர் திரு. வே. கணேசன் உரையாற்றினுர். பரிபாலன சபையின் சார்பில் சிவஸ்ரீ ச. தேவராஜக்குருக்கள் மஹோற்சவ சிவாசாரியார் இ. சபேசக் குருக்களுக்கு பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வேலாயுதம் மகாவித்தியாலய ஆசிரியர் திரு. இ. சந்திரசேகர சர்மா ''நமது சைவசமயக் கிரியைகள் ஒவ்வொன்றிற்கும் சரியான விஞ்ஞான பூர்வமான காரணங்கள் இருக்கின்றன. கிரியைகளுக்கு நல்ல விளக்கமளிக்கக்கூடியவர்களாகவும், சமஸ்கிருதத்தில் ஆழ்ந்த அறிவுள்ளவர்களாகவும் மஹோற்சவ குருமார்கள் இருக்கவேண்டும். இந்தவகையில் சிவஸ்ரீ இ. சபேசக் குருக்கள் திருக்கேதீச்சரம் சிவானந்த குருகுலத்தில் படித்து ஆழ்ந்த அறிவுபெற்றவர்'' என்று கூறினுர்.

சிவஸ்ரீ சா.இரகுநாதக் குருக்கள் வாழ்த்துரை வழங்கினுர்.

## புதிய

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வ. திருநாவுக்கரசு: வே. தியாகராசா; வ. சாந்தலிங்கம்; திருமதி சி. சிவானந்தலோனி திருமதி. ச. முத்துலட்சுமி அம்மா. வை. பரராசசிங்கம், மு. குழந்தைவேலு, ந. மனோகரன் ந. முத்துலிங்கம் ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## நாய்களின் தொல்லை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பட்டினப் பகுதியில் நாய்களின் தொல்லைகளினுல் பொதுமக்கள் மிகுந்த அவஸ்தைப்படுவதாகவும், இந்த நாய்களின் தொல்லையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், பண்டத்தரிப்பு மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரை மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

## விடைத்தாள் திருத்தவேலைகள்

[பண்டத்தரிப்பு]

அண்மையில் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தி புள்ளியிடும் வேலைகள் எதிர்வரும்28 ம் திகதிகொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் கலந்து கொள்ளும் வட பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதி கொழும்பு றேயல் கல்லூரி மண்டபத்தில் செய்து கொடுக்கப் பட்டிருப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## உணவுப் போஷாக்கு குழு

[சித்தன்கேணி]

முகாவில் கிராமோதய சபைப் பிரிவில் அண்மையில் உணவு போஷாக்குகுழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தலைவர் திரு.மு சின்னத்தம்பியும் உறுப்பினர்களாக திருவாளர்கள் வே.நாகரத்தினம் ந.ஆறுமுகம், சு நித்தியானந்தராசா, பொ பரராசசிங்கம்' மு சிவலிங்கம், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்

இக் குழு கிராமங்கள் தோறும் உணவுப் போஷாக்கு சம்பந்தமான கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

## தற்கொலை

(வவுணதீவு)

உறவினர் வீட்டுக்கு செல்வதற்கு அடம்பிடித்த யுவதி நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டாராம். இச்சம்பவம் அண்மையில் மட்டுநகர்- திருப்பெருந்துறையில் இடம் பெற்றுள்ளது.

பரிதாபகரமான முடிவுக்குள்ளானவர் கே. ரமணி (15 வயது) என்பவராகும்.

இவரது மரணம் தொடர்பாக மட்டக்களப்பு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் விசாரணை நடத்தினுர். விசாரணை முடிவில் தற்கொலைஎனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# சுகாதார நிறுவனங்களை பாதுகாக்க நடவடிக்கை

[பண்டத்தரிப்பு]

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்க வைத்தியசாலைகளையும், மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களையும் பாதுகாப்பது தொடர்பாகக் கொழும்பிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுற்றுநிருபம் ஒன்றைச் சகல சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பாதுகாப்புவிடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய அவசிய நடவடிக்கைகள் குறித்து அதில் பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

# கிராமங்களில் கசிப்பு விற்பனை ஒழிக்கப்பட்டது

[சித்தன்கேணி]

சுழிபுரம் பெரியபுலோ கிராமத்தில் கசிப்பு விற்பனை முற்ருக ஒழிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பெரியபுலோ கிராமத்திலும், அயல் கிராமங்களிலும் கடந்த பல மாதங்களாகக் கசிப்பு, அதிகமாகச் சட்ட விரோதமாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனுல் அக்கிராமத்தில் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டது.

சுழிபுரம் பெரியபுலோ அண்ணு ச. நிலைய விழிப்புக் குழுவினர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையினுல் தற்போது இக்கிராமத்தில் கசிப்பு விற்பனை முற்ருக ஒழிக்கப்பட்டுள்ளது.

இதனுல் இக்கிராம மக்கள் அண்ணு ச. ச. நிலையத்திற்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்

[கொழும்புத்துறை)

மல்லாகம் பழம்பதிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 16-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 25-ம் திகதி ரதோற்சவமும், 26-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். 29-ம் திகதி பூங்காவனத்துடன் வருடாந்த உற்சவம் முடிவடையும்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## நாராயணசாமி ஸ்ரீவெங்கடேசன்

தோற்றம்: 21 - 03 - 1934

மறைவு: 23 - 08 - 1983



எம் அனைவரையும் விட்டு திடீரென மறைந்த எம் அன்புத் தெய்வமே! எங்களை அன்பாக வாழவைத்து வழிநடத்திச் சென்ற தெய்வமே! இனியும் உங்கள் ஆத்மா, எங்களை வழி நடத்திச் செல்லும் என்ற நம்பிக்கையில் எங்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தி ஆத்ம சாந்தி பெற இறைவனை இறைஞ்சி நிற்கும்,

அன்பு மனைவி, பிள்ளைகள், அம்மா, அண்ணன்மார், தம்பி, சகோதரி, மச்சான், மச்சாள்மார், மாமி, உற்ருர், உறவினர்.

பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். 1396

# 31-வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## திருமதி வள்ளிப்பிள்ளை இலங்கைநாயகம்

தோற்றம்: 05 - 08 - 1905

மறைவு: 25 – 07 - 1984

எமது அன்புத்தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஒருமாத காலமாகிவிட்டது. ஆனுல் உங்களின் அன்பு உள்ளம் எங்களை விட்டு என்றுமே பிரியாது. தங்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்.



அன்னுரின் மரணச் சடங்குகளில் பங்கு பற்றியவர்களுக்கும் உதவிகள் புரிந்தோருக்கும் மற்றும் எமது அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.

''சாந்தம்'' மயிலிட்டி. 1366

# "தமிழ்எழுத்தாளர்களையும் பாராட்டவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''பிரபல சிங்கள எழுத்தாளராகிய ஜி.பி.சேனநாயக்காவின் இலக்கிய சேவையைப் பாராட்டி அன்னாருக்கு அரசினர் சன்மானம் வழங்கிக்கெளரவித்தமையை யாழ்.இலக்கிய வட்டம் பாராட்டுகிறது.

வாழும் காலத்திலேயே கலைஞர்கள், எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படவேண்டும் என்ற நோக்குடன் செயல்படும் நாம், சிங்கள இலக்கியத்திற்குச் சேவையாற்றிய சிங்கள எழுத்தாளர்களைப்போலவே, ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடிகளாக விருந்து வரும் வடக்கு கிழக்கு மலையக எழுத்தாளர்களையும் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும்

இதுதொடர்பாக காலந்தாழ்த்தாது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். இலக்கிய வட்டத்தின் இணைச்செயலாளர் யாழ்வாணன் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையைக் கேட்டுள்ளார்.

## திடீர் உத்தரவு: கப்பல் திரும்பியது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுஸ்தாபனத்துக்கு ஜிப்சம் ஏற்றிவந்த கப்பல் திடீர் உத்தரவுப்படி கொழும்பு அனுப்பப்பட்டது.

சிமெந்துக் கூட்டுஸ்தாபனத்துக்கு இந்தியாவிலிருந்து 5000 தொன் ஜிப்சத்தை ஏற்றிவந்த 'ரீக்லூட்' என்ற இந்தியக் கப்பல் 2000 தொன் ஜிப்சத்தை காலி துறைமுகத்தில் இறக்கிவிட்டு 300 தொன்ஜிப்சத்துடன் காங்கேசன்துறைமுகத்துக்கு வந்தது.

கப்பல் வந்து 4 தினங்களின் பின் கொழும்பில் இருந்து வந்த திடீர் உத்தரவுப்படி கப்பல் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது

## புதிய பொலிஸ் அதிபர்

(வவனியா]

திரு. கொட்டகதெனிய வவனியா பொலிஸ் அத்தியட்சகராக பதவி ஏற்றுள்ளர்.

வவனியாவில் நடந்த குண்டு வெடிப்பில் அப்போது கடமையிலிருந்தபொலிஸ் அத்தியட்சகர் திரு. ஆ ஹேரத் பலியானது தெரிந்ததே. இவரது இடத்துக்கே திரு. கொட்டகதெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.

குண்டு வெடிப்பில் பலியான பொலிஸ் அத்தியட்சகருடைய மரணம் தொடர்பாக, இவரது அலுவலகத்தில் கடமையாற்றிய ஊழியர்கள் சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.


## மரண அறிவித்தல்
### சின்னக்குட்டி சிவகுரு

மந்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோலாலம்பூரில் வர்த்தகத் தொழில் செய்தவருமாகிய சிவகுரு 22ம் திகதி காலமானார். அன்னார் செல்வபாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி ஈஸ்வரி நரேந்திரா ஆசிரியை கனகரட்ணம் மகா வித்தியாலயம், பத்மநாதன் (SURVEYOR GENERAL OFFICE COLOMBO). விமலா (லண்டன்), டாக்டர் கணேசன் (UNIVERSITY HONGKONG), மகாதேவன் (பொறியியலாளர் லண்டன்) அகியோரின் அன்புத் தந்தையும், நரேந்திரா (EXECUTIVE M. S. INDUSTRIES COLOMBO). ரட்ணமலர், சிறீகாந்தா (கணக்காளர் லண்டன்), பவானி (HONGKONG), ஜெயந்தி (கணக்காளர் லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரினது ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு 18/2 கச்சேரி கிழக்கில் நடைபெறும்.

(1408)



## மரண அறிவித்தல்
### ஆறுமுகம் இராசையா

யாழ்ப்பாணம் 38 மூன்றும் குறுக்குத்தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் இராசையா சிவபதமடைந்துவிட்டார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (நில அளவை திணைக்களம், திருகோணமலை), ஜானகி, இராமச்சந்திரன் (லங்கா சிமெந்து லிமிட்), மகேஸ்வரன் (பிரான்ஸ்), பாலச்சந்திரன் (நில அளவையாளர், ஈராக்), ஜெயராஜா, தேவகி, ரஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தாதேவி, பீஷ்மன் (நெடுஞ்சாலைகள் திணைக்களம், திருகோணமலை), வசந்தராதேவி, மனோரஞ்சிதம், பிரேமளா, காங்கேசன் (Telecommunications), அசோகராஜா (லங்கா சிமெந்து லிமிட்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-8-84) பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(1294)


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

## குருநகரில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அத்துடன் ஓய்வூதியம் பெறுவோர்களில் வங்கிக் கணக்குள்ளவர்களுக்கும் இன்று ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

### ஆசிரியர் சம்பளம்

ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவது குறித்து இன்று காலை ஆலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும் என்றும் பெரும்பாலும் இன்றே கல்வித் திணைக்களத்தின் மூலம் காசோலைகள் வழங்கப்பட்டு பின்னர் வேதனம் கொடுக்கப்படலாம் என்றும் அவ்அதிகாரி தெரிவித்தார்

நேற்றும் 400க்கு மேற்பட்டோருக்கு இங்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. (மா)

## இலங்கை அகதி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பி.யுமான திரு. எம். ஸி. பண்டாரி, இலங்கையில் மனித உரிமை நிலைமை படுமோசமாக இருப்பதாகவும், உடன் நடவடிக்கை எடுத்து பாதுகாப்புப் படையினரின் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கோரினார்.

## மட்டு 'நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராணுவத்தினர் ஒரு பெண் உட்பட நால்வரைக் கைது செய்துள்ளதுடன் கைக்குண்டு துப்பாக்கிகளையும் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை இக் கிராமத்தில் தீவிர சோதனையை ஆரம்பித்த ராணுவத்தினர் நண்பகல்வரை சோதனையிட்டனர்.

ராணுவத்தினர் நேற்று மட்டக்களப்பு பஸ்நிலையத்திலும் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் உமா மகேஸ்வரனின் நெருங்கிய சகா ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பார்த்தசாரதி. .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தி அண்மையில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திற்கு அவர் தனது பதில் கடிதத்தை தூதுவர் மூலம் அனுப்பிவைத்துள்ளார்.

அண்மையில் வடபகுதியில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு கவலை தெரிவித்த ஜனாதிபதி பயங்கரவாதிகளின் தளமாக இந்தியா பயன்படுத்தப்படுவதை அனுமதிக்கவேண்டாம் என்று கேட்டுள்ளதாகவும் தெரிகிறது. (இ)

## இந்திய உபஜனாதிபதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராமனை எதிர்த்து எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராசப் பாரத குடியரசுக் கட்சித் தலைவர் திரு. பி. டி. காம்லே போட்டியிட்டார்.

இம்மாதம் 30ம் திகதியுடன் உப ஜனாதிபதி எம். கிதாயத்துல்லாவின் பதவிக்காலம் முடிகிறது. 31ம் திகதி புதிய உப ஜனாதிபதிப் பதவி ஏற்பார்.

## இஸ்ரேல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீயத் தொடர்புகள் ரத்துச் செய்யப்பட்டன.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவொன்று கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

திரு கிம்சேயுடன் திரு லியனகே நடத்திய பேச்சுக்களின் விபரம் வெளியிடப்படவில்லை இலங்கையில் விவசாயம், மற்றும் அபிவிருத்தி வேலைகளிலும் இஸ்ரேலியரின் பங்களிப்புத் தேவையென திரு லியனகே கோரியதாகக் கருதப்படுகின்றது.

## சைப்பிரஸ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பின்வரும் யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன:-

சைப்பிரஸை துருக்கியர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் இரு மாகாணங்கள் அல்லது மாநிலங்களாகப் பிரிக்கப்படவேண்டும்.

துருக்கியர் 18 வீதமாக இருக்கின்றபோதிலும் நாட்டின் 25 வீத நிலப்பரப்பு அவர்களது மாநிலத்திற்காக ஒதுக்கப்படவேண்டும்.

ஜனாதிபதி கிரேக்க இனத்தவராக இருக்கும் பட்சத்தில் உப ஜனாதிபதி துருக்கியர் இனத்தவராக இருக்கவேண்டும.

அமைச்சரவையில் 30 வீதம் துருக்கியருக்கும் 70 வீதம் கிரேக்க மக்களுக்கும் ஒதுக்கப்படவேண்டும். பாராளுமன்றத்திலும் விகிதாசார அடிப்படையிலேயே அங்கத்துவம் வழங்கப்படவேண்டும்.

''துருக்கியர் வாழும் பகுதியிலிருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும்.

துருக்கிய தேசிய இராணுவப் படை அமைக்கப்பட வேண்டும் ஐக்கிய நாடுகள் சமாதானப்படையை சைப்பிரஸில் குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்தி அமைதி காக்க வேண்டும்

''சைப்பிரஸ் ஜனாதிபதியின் இத் திட்டம் ஐ. நா. பொதுச் செயலாளர் திரு பெரஸ் டி குய்லரிடம் பரிசீலனைக்காக கையளிக்கப்பட்டதுடன் லண்டன் பத்திரிகை ஒன்றிலும் விளம்பரமாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மை கிரேக்க இனத்தைச்சேர்ந்த திரு ஜிப்றியானு தமது திட்டம் குறித்து ஐ. நா. சபையிடமிருந்து மட்டுமல்ல; உலக மக்களிடமும் குறிப்பாக கிரேக்க, துருக்கிய மக்களிடமிருந்தும் அவர்களது அபிப்பிராயத்தை அறிவதற்கு மேற்கொண்டுள்ள இம்முயற்சி சரித்திரம் காணாத முன் மாதிரியாகும் என்றும்தெரிவித்த திரு குமார் பொன்னம்பலம் சைப்பிரஸ் ஜனாதிபதியின் திட்டம் எமக்கும் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பது தமது தனிப்பட்ட கருத்து என்றும் கூறினார்.

## மேலும் 10 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் வைத்துக் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் மேலும் 10 பேர் இன்று விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் கொழும்பிலிருந்து இன்று காலை ரயிலில் புறப்பட்டு நண்பகல் யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 56 இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே. [மா]

## 327 பேர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வல்வெட்டித்துறையில் கடந்த 4ம் திகதி 327 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகக் கொழும்பு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அப்பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துரையப்பா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்திருந்தனராம். அதுவும் நிராகரிக்கப்பட்டதன் பேரில் யாழ். பொலிஸ் நிலையம் முன்பாகவுள்ள துரையப்பா ஸ்ரேடியக் கட்டிடத்தில் வைத்துக் கொடுக்க முடிவு செய்யப்பட்டதாக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இத்தீர்மானத்தின்படி நேற்றுக் காலை துரையப்பா ஸ்ரேடியத்தில் 10-30 மணியளவில் ஓய்வூதியம் வழங்குவது ஆரம்பமானது.

உச்சிவெயிலிலும் உடல் நலம் குன்றிய வயோதிபர்கள் கால் கடுக்க நீண்ட கியூவில் ஓய்வூதியம் பெறுவதற்குக் காத்து நின்றனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபம் வரை நீண்டவரிசையில் வயோதிபர்கள் நின்றனர். வயோதிபமாதினரே அதிகமாகக் கியூவில் காணப்பட்டனர்.

ஆயுதப் படையினரில் சிலர் ஓய்வூதியம் வழங்கும் கட்டிட அறைக்கு வெளியில் பாதுகாப்பிலிருந்தனர். அப்பகுதியில் வாகனங்களிலும் ஆயுதப்படையினர் ரோந்துசேவையில் ஈடுபட்டிருந்தனர்.

முதியவர்கள் நீண்ட கியூவில் நிற்கும் அவலக்காட்சியைக் கண்டு பொறுக்காத தபாலக உயர் அதிகாரிகள் கியூவில் நின்றவர்களை மூன்று கட்டங்களாகப் பிரித்து ஓய்வூதியம் வழங்குவதில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம். வட்டுக் கோட்டை, உரும்பிராய் பகுதிகளிலுள்ளவர்களுக்கு நேற்று ஓய்வூதியம் வழங்கப்பட்டது. பிற்பகல் 2-30 மணியளவில் ஓய்வூதிய கொடுப்பனவு முடிவடைந்த போதிலும் கியூவில் நின்ற எவரும் ஏமாற்றத்துடன் திரும்பவில்லை என்று தபாலக உத்தியோகத்தர் சொன்னார்.

முன்னர் அறிவித்தபடி இன்று பண்டத்தரிப்பு, சுழிபுரம், யாழ்ப்பாணப் பகுதியிலுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்,

ஓய்வூதியம் பெறுவதற்கு வரமுடியாதளவுக்கு நோய்வாய்ப்பட்டவர்கள், பென்சன் பெறும் பத்திரத்தின் பின் பக்கத்தில் உள்ள பகுதியை நிரப்பி, சமாதான நீதவானின் கையொப்பத்துடன் அடையாள அட்டையையும் இணைத்து உறவினர் ஒருவர் மூலம் ஓய்வூதியம் பெறலாம் என்று உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். (மா)


## மரண அறிவித்தல்
### செல்லையா நச்சிக்கேதா

கொழும்பு அல்பிறெட்பிளேஸ் கமலாசனம் செல்லையா நச்சிக்கேதா சட்டத்தரணி-பிரசித்தநொத்தாரிஸ் கரம்பொன்னில் 18ம் திகதி சனிக்கிழமை காலமானார். இவர் கரம்பொன் காலஞ்சென்ற நாகலிங்கம் செல்லையாஅவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், திருமதி லலிதா மஹாலிங்கம்-ஸாம்பியா, திருமதி சுசிலா நவரட்ணராஜா - பர்மிங்ஹாம் ஹரன் - பப்புவாநியூகினி, விமலன் - மிடில்செக்ஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆர். மஹாலிங்கம்-ஸாம்பியா, K. நவரட்ணராஜா - பர்மிங்ஹாம், திருமதி சுபத்திரா ஹரன் - பப்புவாநியூகினி ஆகியோரின் மாமனும், நளாயினி, அகிலன், மயூரன், குமரன், சாம்பவி, கோபி ஆகியோரின் பாட்டனும், காரைநகர் வலந்தலை காலஞ்சென்ற வீரகத்தி தம்பிப்பிள்ளை அவர்களின் மருமகனுமாவார் தகனக்கிரியை 23ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கரம்பொன் மேற்கு மயானத்தில் நடைபெறும் உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்

'கமலம்' கரம்பொன், ஊர்காவற்றுறை.

(1286)